சுருக்கம்

பள்ளிக் கல்வி – மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – பள்ளி சதுரங்க ஒலிம்பியாட் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (பக7(2))த் துறை

அரசாணை (நிலை) எண். 110 நாள்:22.06.2022

திருவள்ளுவர் ஆண்டு – 2053
சுபகிருது வருடம், ஆனி –8

படிக்கப்பட்டவை:

1. 2022– 2023ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு எண்.21, நாள் 11.04.2022.
2. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.10530/எம்/இ4/ 2022, நாள் 07.06.2022.

-------------

ஆணை

2022–2023ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பள்ளி சதுரங்க ஒலிம்பியாட் குறித்து கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் சென்னையில் நடைபெறும் சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளைத் தொடர்ந்து அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே சதுரங்கம் குறித்து ஆர்வத்தை ஏற்படுத்தும் வண்ணம் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் சதுரங்கப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெறும் மாணவர்கள் சர்வதேச விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்யப்படும். இத்திட்டம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்."

2. மாணவர்களின் நுண்ணறிவுத் திறன், செயல்பாட்டுத் திறன், ஆளுமைத் திறன் என பல்வேறு திறன்களை சதுரங்கப் போட்டிகளின் வழியே வெளிக்கொணர பள்ளியளவில் தொடங்கி மாவட்ட, மாநில அளவிலான சதுரங்கப் போட்டிகள் நடத்திடவும், சென்னையில் வரும் ஜீலை, ஆகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ள சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளில் அரசுப் பள்ளி மாணவர்களை பார்வையாளர்களாக பங்கேற்கச் செய்திடவும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மேற்காண் அறிவிப்பு குறித்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில்

(த.பி.பா.,)

பள்ளிக் கல்வி ஆணையர் பின்வரும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(i) மாணவர்கள் சதுரங்க போட்டியின் முக்கியத்துவத்தினை அறியும் வகையில் அனைத்துப் பள்ளிகளிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி இயக்குநர்கள், உடற்கல்வி ஆசிரியர்களுக்கு சதுரங்க விளையாட்டு நிபுணர்கள் வாயிலாக ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி அளித்து சதுரங்கப் போட்டியின் விதிமுறைகள் மற்றும் விளையாட்டு நுட்பங்கள் மாணவர்களைச் சென்றடையவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ii) சதுரங்கப் போட்டியானது 1-5ஆம் வகுப்பு வரை, 6-8ஆம் வகுப்பு வரை, 9-10 மற்றும் 11-12ஆம் வகுப்பு என 4 பிரிவினராக போட்டிகள் நடத்தவும், இப்பிரிவினருக்கு 1-5 வரை பள்ளி அளவிலும், 6-12ஆம் வகுப்பு வரை பள்ளி / வட்டாரம் / மாவட்ட அளவிலும் போட்டிகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(iii) மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெறும் 9 முதல் 12ஆம் வகுப்பு மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 9-10ஆம் வகுப்பு மற்றும் 11-12ஆம் வகுப்பு வீதம் 8 மாணவ, மாணவியர்கள் (38 மாவட்டங்களிலிருந்து 152 மாணவர்கள், 152 மாணவிகள் என மொத்தம் 304 மாணவர்கள்) சதுரங்க ஒலிம்பியாட் போட்டியினை பார்வையிடும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரலாம்.

(iv) 6-8ஆம் வகுப்புப் பிரிவிலிருந்து மட்டும் மாவட்ட அளவில் முதல் இரண்டு இடங்களில் வெற்றிபெறும் 152 மாணவ, மாணவியரை மாநில அளவில் நடைபெறும் 5 நாள் முகாம் மற்றும் போட்டிகளில் பங்கேற்க வாய்ப்பு வழங்கலாம். இம்முகாமிலுள்ள மாணவ மாணவியரை சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் வீரர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பினை வழங்கி ஊக்கப்படுத்தலாம்.

(v) அனைத்து நிலைகளிலும் நடைபெறும் சதுரங்க போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் சான்றிதழ், பரிசுகள் வழங்கலாம்.

3. தமிழ்நாட்டில் நடைபெறும் சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட்டை ஒட்டி, அரசுப் பள்ளிகளில் சதுரங்க ஒலிம்பியாட் நடத்துவதற்கு, கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு ரூ.86,01,390/- செலவினம் ஏற்படும் என்றும்

(த.பி.பா.,)

தெரிவித்து, அத்தொகையினை 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

| வ. எண் | பொருள் | வட்டார / மாவட்ட அளவிலான செலவினம் | மொத்தச் செலவினம் ரூ. |
|---|---|---|---|
| 1. | வட்டார அளவிலான போட்டிகள் | 9500X413 | 3923500 |
| 2. | மாவட்ட அளவிலான போட்டிகள் | 33800 X38 | 1284400 |
| 3. | மாநில அளவிலான போட்டிகள் மற்றும் பயிற்சிகள் | - | 1397300 |
| 4. | மாணவர்கள் சர்வதேச அளவிலான போட்டியினை பார்வையிடுதல் | - | 446600 |
| 5. | மாவட்ட அளவில் உடற்கல்வி இயக்குநர்கள் / உடற்கல்வி ஆசிரியர்களுக்கான சதுரங்க விளையாட்டுப் போட்டி பயிற்சி வகுப்பு (1 நாள் மட்டும்) | 30000 X38 | 1140000 |
| 6. | சில்லறை செலவினம் | - | 409590 |
| | | மொத்தம் | 86,01,390 |

4. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே பத்தி 3-இல் காணும் பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்த அரசு அதனை ஏற்று, அவ்வாறே, அரசுப் பள்ளிகளில் சதுரங்க ஒலிம்பியாட் நடத்துவதற்கு ஏதுவாக, மேலே பத்தி 3இல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு ஆகும் செலவினத்திற்கு ரூ.86,01,390/-னை (ரூபாய் எண்பத்து ஆறு இலட்சத்து ஆயிரத்து முந்நூற்று தொண்ணூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி-4இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 – பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 800 ஏனைய செலவு மாநிலச் செலவினங்கள் – JZ பள்ளி மாணவ / மாணவியர் பங்குபெறும் வகையில் குறுவட்டம் / கல்வி மாவட்டம் / மண்டலம் அளவில் பள்ளிகளிடையே சதுரங்க விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் – 309 உதவித்தொகை – 09 – ஏனையவை

(D.P.Code – 2202 – 02 – 800 JZ 30909)."

(த.பி.பா.,)

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவைப்படும் கூடுதல் நிதி ரூ.64,01,390/-, 2022-23ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இருப்பினும் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி(SI) இச்செலவினம் 2022-23ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2022-23ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2022-23) சேர்க்கத் தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி(கல்வி-II/வ.செ.பொ-I)த் துறைக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.30080/கல்வி-II/2022, நாள் 22.06.2022இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.440 (நானூற்று நாற்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

**காகர்லா உஷா**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை–6.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்(தெற்கு), சென்னை-35.
மாநிலக்கணக்காய்வு தலைவர், சென்னை – 18.

**நகல்**
நிதித் (கல்வி-II / வ.செ.பொ.1 / 2 / வ.வ.) துறை, சென்னை-9.
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை - 9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
பள்ளிக் கல்வித் துறையின் முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை – 9.
பள்ளிக் கல்வி (வரவு செலவு) துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

22/6/22

பிரிவு அலுவலர்

22/6/22